பொருளடக்கம்



அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில்

சிறுவாச்சூர், பெரம்பலூர் வட்டம் மற்றும் மாவட்டம்

இறைவி	அருள்மிகு மதுரகாளியம்மன்
தீர்த்தம்	திருக்குளம்
தலவிருட்சம்	மருதமரம்

தலவரலாற்றுச் சிறப்பு

குலோத்துங்க சோழனால் திருப்பணி செய்யப்பட்ட சிறுவாச்சூர் அன்னையின் திருக்கோயில் மலைகள், ஏரி, குளம், தோப்புகள், வயல்கள் சூழ்ந்துள்ள மனதிற்கினிய சூழலில் ஊரின் எல்லையில் அமைந்துள்ளது.

சிலப்பதிகார நாயகி கண்ணகி, மதுரையை எரித்த பிறகு மன அமைதிகொள்ளாமல், இத்தலம் வந்து அமைதி கொண்டதாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. சிறுவாச்சூரின் வழிபடு தெய்வம் செல்லியம்மன் ஆகும். ஒரு மந்திரவாதி தனது மந்திர வலிமையால், செல்லியம்மனைக் கட்டுப்படுத்தித் தீயச் செயல்களுக்குப் பயன்படுத்தி வந்துள்ளான். மதுரை காளியம்மன் இத்தலத்திற்கு வந்து ஒரு வெள்ளிக்கிழமை இரவு தங்க இடம் கேட்டபோது, செல்லியம்மனோ, தன்னை மந்திர வலிமையால் தொல்லைப்படுத்தும் மந்திரவாதி பற்றி கூறுகிறாள்.

மதுரை காளியம்மன், அதற்குத் தகுந்த வழிசெய்வதாகக் கூறித் தங்குகிறாள். வழக்கப்படி வந்த மந்திரவாதியை அன்னை எதிர்கொண்டு அழித்துவிடுகிறாள் அவள் திறனைக் கொண்டு, இனி அவளே சிறுவாச்சூர் ஆலயத்திலிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்து வரவேண்டுகிறாள். செல்லியம்மன் தான், அருகிலிருக்கும் பெரியசாமி மலைக்கு சென்றுவிடுவதாகவும், கோயிலில் எப்போதும் தனக்கு முதல்பூஜை வேண்டும் எனவும் கூறுகிறாள். மதுரை காளியம்மனும் அதற்கு ஒப்புக்கொண்டு ஆலயத்தில் அமர்கிறாள். செல்லியம்மன் தனக்கு முதல் பூஜை வேண்டுமென்று கேட்டதற்கு ஏற்ப, இன்றும் பூஜையின் போது தீபாரதனை காட்டும் போதும், முதலில் மலைநோக்கி மேலே தீபாரதனைகாட்டிய பிறகே மதுரைகாளியம்மனுக்கு தீபாரதனை காட்டும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.மதுரை காளியம்மன் என்ற பெயர் தான் பின்னர் மதுர காளியம்மன் என்று எழுந்தருளிபாலித்து வருகிறார். சிறுவாச்சூருக்கு வெள்ளிக்கிழமை வந்த மதுரை காளியம்மன் பக்தர்களுக்கு திங்கட்கிழமை காட்சி தருகிறாள். எனவே தான், திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் ஆலயம் திறந்திருக்கும். மற்ற நாட்களில் மதுரகாளியம்மன், செல்லியம்மனுடன் பெரியசாமி மலையில் தங்குவதாகக் கூறுகிறார்கள். செல்லியம்மன், மதுரகாளியம்மன் இரு தெய்வங்களும் சிறுவாச்சூரின் காவல் தெய்வங்களாக உள்ளன.

திருவிழாக்கள்

வார நாட்களில் வெள்ளி மற்றும் திங்கட் கிழமைகளில் மட்டும் வழிபாடு நடைபெறுவதுடன் ஆண்டுதோறும் சித்திரை மாதம், அமாவாசைக்குப் பிறகு வரும் முதல் செவ்வாய்கிழமை பூச்சொரிதல் தொடங்கும். அதற்கடுத்த செவ்வாய்கிழமை காப்புக்காட்டி 13 நாட்கள் திருவிழா சிறப்புடன் நடைபெறுகிறது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கும் திருவிழாவில் மலை வழிபாடு, திருக்கல்யாணம், வெள்ளிக்குதிரை வாகனம், திருத்தேர் ஆகியவை முக்கிய திருவிழா நாட்களாகும்.

தங்கரதம்

அம்மனுக்கு மிகவும் அழகாக தங்கரதம் உருவாக்கப்பட்ட தங்கரதத்தில் இரவு 6.30 மணியளவில் தங்கரத புறப்பாடு நடைபெற்று வருகிறது. ரூ.1000/- கட்டணம் செலுத்தி ஏராளமான பக்தர்கள் தங்கரதம் இழுத்து காணிக்கை செலுத்தி வருகிறார்கள்.

இதர சிறப்புகள்

கல்யாண வரம், குழந்தை வரம் வேண்டுவோர் இத்தலத்தில் பெருமளவில் வந்து வழிபடுகின்றனர். நோய்கள், பில்லி சூனியம், வழக்கு சிக்கல்கள் , காணாமல் போன பொருள்கள், வியாபார சிக்கல் முதலியவற்றுக்கு ஸ்ரீ மதுரகாளியம்மனை வழிபட்டால் தீர்வு கிடைக்கிறது

பக்தர்கள் தங்குவதற்கு குளிரூட்டப்பட்ட மற்றும் சாதாரண அறைகள் 12 கட்டப்பட்டு மிகவும் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. வெளியூர்களில் இருந்தும் வெளி மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் அதிக அளவு வருகின்றனர். இங்கு பக்தர்கள் வசதிக்காக பெரிய திருமண மண்டபம் அனைத்து நவீன வசதிகளுடன் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டு வருகிறது

நடை திறக்கும் நேரம்

திங்கள் ,வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி மற்றும் விசேஷ நாட்களில்மட்டும் காலை 6.30 முதல் இரவு 9.00 மணி வரை நடை திறந்திருக்கும்.

பூஜா காலம்

உச்சிக்காலம் பகல் 1.00 மணி

அமைவிடம்

இத்திருக்கோயில் திருச்சியிலிருந்து சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் திருச்சியிலிருந்து 50. கி.மீ. தொலைவிலும், பெரம்பலூரிலிருந்து 8 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

வழித்தடம்

திருச்சியிலிருந்தும் பெரம்பலூரிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன. பெரம்பலூரிலிருந்து சிற்றுந்து வசதிகளும் உள்ளன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில்,
சிறுவாச்சூர், பெரம்பலூர் மாவட்டம் 621 113
தொலைபேசி : 04328 291375
இணையதளம் : www.sriuvachurmadhurakaliamman.tnhrce.in.
மின்னஞ்சல் : srimathurakaliamman@gmail.com

பெரியசாமி மலை



அருள்மிகு பெரியசாமி



பெரியசாமி மலைக்கோயில்

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான பெரியசாமி மலை 44.27 செண்ட் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மேற்படி மலையில் பெரியசாமி கோயில், செங்கலை அய்யன் கோயில், பதினெட்டு சித்தர்கோயில், பெருமாள் கோயில் ஆகியவை உள்ளன. மேற்படி திருக்கோயில்களில் உள்ள விக்கிரகங்கள் அனைத்தும் சுட்ட மண்ணால் செய்யப்பட்ட சிற்பங்கள் ஆகும். பெரிய சாமி மலை அடிவாரத்தில் உள்ள அருள்மிகு பெரியசாமி திருக்கோயில் சுவாமி சிலைகள் தனி சன்னதி இல்லாமல் வெட்டவெளியில்அமைந்துள்ளது. மேற்படி மலையில் சிலைகளுடன் சேர்ந்த சுட்ட களிமண்ணால் செய்யப்பட்ட சிறிய உப சிலைகள் சேர்ந்த சுட்ட களிமண்ணால் செய்யப்பட்ட சிறிய உப சிலைகள் ஆக மொத்தம் 95 சிலைகள் உள்ளது. மேற்படி மலையில் சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையான சுடுகளிமண் சிற்பங்கள் வழிபாட்டிற்கு உள்ளன. மேற்படி மலைக்கு ஏராளமான பக்தர்கள் வந்து வழிபட்டு செல்கின்றார்கள். மேற்படி சில விக்கிரகங்களை டெரகோட்டா முறையில் சின்னஸ் சாதனை முயற்சியாக பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

அருள்மிகு சோலை கன்னியம்மன் திருக்கோயில்

இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு சோலைகன்னியம்மன் திருக்கோயில் இத்திருக்கோயிலுக்கு அருகிலேயே அமைந்துள்ளது. மேற்படி திருக்கோயிலில் குழந்தை வரம் வேண்டினால் மேற்படி வேண்டுதல் இவ்வம்மன் அருளால் நிறைவேறி வருகிறது. ஆகையால் ஏராளமான பெண்கள் வழிபட்டு வருகின்றனர்.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயில்,
சிறுவாச்சூர், பெரம்பலூர் மாவட்டம் 621 113
தொலைபேசி : 04328 291375
இணையதளம் : www.sriuvachurmadhurakaliamman.tnhrce.in
மின்னஞ்சல் : srimathurakaliamman@gmail.com



அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயில்

பெரம்பலூர் நகர் மற்றும் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்

இறைவன்	அருள்மிகு மதனகோபாலசுவாமி
இறைவி	அருள்மிகு மரகதவள்ளி தாயார் மற்றும்
	ஸ்ரீதேவி , பூதேவி
தீர்த்தம்	திருக்குளம்
தலவிருட்சம்	மகிழமரம், நந்தியாவட்டை
ஆகமம்	வைகானஸ ஆகமம்

வரலாற்றுச் சிறப்பு

துவாபர யுகத்தில் வியாக்கிர முனிவருக்கு ஏற்பட்ட சாபத்திற்கு விமோட்சனம் கொடுத்த தலமாகும். பஞ்ச பாண்டவர்கள் வனவாசம் செய்யும் காலத்தில் மகாவிஷ்ணு மதனகோபாலனாக அவதாரம் செய்தார். அவரைத் தரிசனம் செய்த பின்னர் புலி உருவம் நீங்கப் பெற்று சாப விமோட்சனம் அடைந்ததாக சொல்லப்படுகிறது.

"துர்வாசரின்" சீடராக இருந்த வியாக்கிர முனிவர் ஒரு சமயம் கவனக் குறைவால் தம் குருநாதரின் கமண்டலத்தில் இருந்து நீரைத் தட்டி விட்டார். அதனால் கோபமடைந்த துர்வாசர், அவரைப் புலியாக மாறும்படி சபித்தார்.

பதறிப்போனார் சீடர், மன்னிக்கும்படி வேண்டினார். சாபம் விட்டது விட்டது தான். அதை மாற்ற முடியாது. ஆனால் விமோட்சனம் சொல்கிறேன். புலியாக நீ உலாவும் பகுதிக்கு பஞ்ச பாண்டவர்கள் வருவார்கள், அப்போது பீமனின் கதையால் நீ அடிபாடுவாய், அந்த சமயத்தில் உன் சாபம் தீரும். என்றார் துர்வாசர்.

அதன்படி வியாக்கிர முனிவர் புலி உருவம் பெற்று இளம் புலியாகவும் குரும்புலியாகவும், கீழப்புலியாகவும், பெரும்புலியாகவும், வளர்ந்து வந்தார். அதன் காரணமாகவே இப்பகுதியில் புலியூர் என்ற பெயரில் சிற்றூர்கள் பல உள்ளன. அதாவது எளம்பலூர், குரும்பலூர், மேலப்புலியூர், கீழப்புலியூர், பெரம்பலூர் என்பவனவாகும்.

இப்பகுதியில் பெரும்புலியாக சஞ்சரித்ததால் பெரும்புலியூர் எனப் பெயர் பெற்று நாளடைவில் திரிந்து பெரம்பலூர் எனப் பெயர் பெற்று விளங்குகிறது என்றும் கூறுவர். வியாக்ரம் என்றால் புலி என்று அர்த்தம். முனிவர் புலி வடிவில் இருந்ததால் அந்தத்தலம் வியாக்கிரமபுரம் என்று ஆனது தமிழில் பெரும்புலியூர் அதுவே மருவி பெரம்பலூர் ஆகிவிட்டது. என்று செவிவழி செய்தி கூறுகின்றது. கௌரவர்கள் சூழ்ச்சியால் வனவாசம் செய்தார்கள் பாண்டவர்கள். அப்பொழுது ஒரு முனிவர் அவர்களை சந்தித்தார். உங்களின் இந்த நிலைக்கு காரணம் தீவினை பாவம் தான் அது தொலைய தீனரட்சகனான திருமாலை துதியுங்கள் என்று சொன்னார். அப்படியே புருஷோத்தமனை பூஜிக்கத் தொடங்கினார்கள். பாண்டவர்கள்.

ஒரு நாள் பூஜைக்கு தேவையான நீர் எடுக்க ஆற்றங்கரைக்கு சென்ற பாஞ்சாலி, தண்ணீர் எடுக்காமலே பதட்டத்துடன் ஓடி வந்தார். அவளை ஆசுவாசபடுத்திய பீமன் அவளது அச்சத்திற்கு காரணம் கேட்டார். பெரியபுலி ஒன்று துரத்துவது தான் தன் கிலிக்குக் காரணம் என்றாள் பாஞ்சாலி உடனே கதையுடன் புறப்பட்டான் பீமன்.

தவறவிட்ட நோஞ்சானான பெண்ணுக்கு பதில், திடகாத்திரமான ஆண், கொழுத்த வேட்டை என்று பாய்ந்தது புலி, அடுத்த கணம் தலையில் இடிபோல் விழுந்தது ஓர் அடி, மரண ஓலம் எழுப்பிய புலி, கீழே விழுந்து துடித்தது, துவண்டது, சட்டென்று முனிவராக மாறி எழுந்தது.

புலி பாய்ந்தபோது துணிவுடன் நின்ற பீமன் அது முனிவராக மாறியதும் அதிர்ந்தான். பெரும் தவறு செய்து விட்டதாக பயந்தான் மன்னிப்பு வேண்டி பணிந்தான். அவனைப் பார்த்த முனிவர் தனது சாபம் விலகிய கதையை அவனுக்குச் சொன்னார். தனக்கு நன்மை செய்த பீமனுக்கு வீரம் பன்மடங்காக சேர வரம் அளித்தார். பாண்டவர்கள் அப்பகுதியில் எழுந்தருளி இருந்த அருள்மிகு மதனகோபாலசுவாமியை வழிபட்டனர்

வழிபாடு செய்த பாண்டவர்களுக்கு முனிவர் வரம் தந்தார், வாசுதேவன் அவர்கள் துன்பம் தீர அருளினார். வினை தீர்க்க வந்த வேணுகோபாலசுவாமியிடம் பாண்டவர்கள் இத்தலத்தில் நீங்கள் நிரந்தரமாக வாசம் செய்திட வேண்டும். எங்களுக்கு இந்த துன்பங்கள் வந்ததற்கு முக்கியமான காரணம் உறவினர்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் போனது தான். எனவே இங்கே வந்து உன்னை வணங்குவோரின் இல்லறம் நல்லறம் ஆக அருள வேண்டும் என வேண்டினார்கள்.

அப்படியே ஆகட்டும் நீங்கள் அன்போடு வழிபட்டால் எனக்கு பிடித்தமான தலங்களில் இதுவும் ஒன்றாகத் திகழும் என்று வரம் அளித்தார் அச்சுதன். பெருமாளுக்கு பிடித்த ஊர் பெருமாள் ஊர் என்றாகி, திரிந்து பெரம்பலூர் ஆகிவிட்டது என்றும் கூறுகின்றனர்.

பாண்டவரின் தீவினைகள் நீங்கி அவர்களது துயரங்கள் நீங்கவும், வியாக்கர ரிஷியின் சாபம் விலகவும் அருளிய அதே தலத்தில் இன்றும் அருள்பாலித்து வருகிறார் கோவிந்தன். ஒப்பற்ற வடிவழகுடன் தோன்றியதால் மதனகோபாலன் என்ற திருநாமம் இவருக்கு ஏற்பட்டது.

மேற்கண்ட சிறப்புகளை உடைய இத்திருக்கோயில் கி.பி.9-ம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர் திருபுவன சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவர் அவர்களால் திருப்பணி செய்யப்பட்டது. கோயிலின் மதிற்சுவர் நீளம் 277 அடி அகலம் 138 அடி திருக்கோயிலுக்கு இரண்டு பிரகாரங்கள்அமையப்பெற்றுள்ளன.

சிற்பச் சிறப்பு

பாண்டியர்கால மீன் சின்னங்கள் பொறிக்கப் பட்டுள்ளன, தூண்களில் செதுக்கப்பட்டுள்ள படைப்புச் சிற்பங்களும் கலை நயத்துடன் காட்சி அளிக்கிறது.

இலக்கியச் சிறப்பு

திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல்களும் திவ்ய பிரபந்தங்கள் பாராயணம் செய்வதும் சிறப்பாக பேணப்பட்டு தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவிவருகின்றனர். திருப்பாதங்களுக்கு தமிழை முன்னிலைப்படுத்தி சேவையாற்றும் முறை இத்திருக்கோயிலில் அதிகம் கடைபிடிக்கப்படும் நிகழ்ச்சியாகும்.

கல்வெட்டுச் சிறப்புக்கள்

இத்திருக்கோயிலுக்கு பாண்டிய மன்னர்களால் நிலக்கொடைகள் வழங்கப்பட்ட விபரம் தமிழ்நாட்டு கல்வெட்டுகள் தொகுதி மூன்றில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் வெளியிடப்பட்டுள்ளது. அதில் பெரம்பலூர் நகரில் அமைந்துள்ள மதனகோபாலசுவாமி திருக்கோயிலில் 10 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவை பிற்கால பாண்டியர்கால கல்வெட்டுகள் ஆகும். ஜடாவர்மன் முதலாம் சுந்தரபாண்டியயன் கால கல்வெட்டுகளில் அவனது பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்காக இத்திருக்கோயிலுக்கு 24 வேலி நிலமும் அவன் தமக்கையின் பிறந்த நாளுக்காக 12 வேலி நிலமும் கொடையளிக்கப்பட்ட செய்திகள் கூறப்பட்டுள்ளன.

மேலும் இதே அரசன் நொச்சியம் என்னும் கிராமத்தையும், தன் பிறந்த நாள் வழிபாட்டுக்காக இக்கோயிலுக்கு கொடுத்துள்ளான் என்றும் நாயக்கர் அரசர் காலத்தில் தம்மியப்ப நாயக்கரின் பிரதிநிதியான ரமஞ்சி துலுக்க நாயக்கர் என்பவர் இக்கோயிலில் நவக்கிரக பூசைக்காக நிலக்கொடை கொடுத்துள்ளார். இதன்மூலம் தமிழ்நாட்டின் நவக்கிரக பூஜை பாண்டியர் காலத்திலேயே நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த செய்தியை அறிய முடிகிறது.

இதே சமகாலத்து மற்றொரு கல்வெட்டில் நொச்சியம் கிராமம் சர்வ மான்யமாக இத்திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட செய்தியும் கூறப்படுகிறது. கி.பி.12 - ம் நூற்றாண்டு அளவில் இக்கோயிலில் வீரபயங்கர மண்டபம் என்று ஒரு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இலுப்பைக்குடியில் காணப்படும் மதுரை நாயக்கர் கால கல்வெட்டு சொக்கநாயக்கர் பெயரால் அமைந்த சத்திரம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட கொடையை கூறுகின்றது.

இத்திருக்கோயிலுக்கு பாண்டிய மன்னர்களால் வழங்கப்பட்ட நிலக்கொடை விபரங்களை அறிய ஏதுவாக செதுக்கப்பட்ட கல்வெட்டுகள் அனைத்தும் இத்திருக்கோயிலின் மூல ஸ்தானத்தின் வெளி சுவர்களில் பதிக்கப்பட்டுள்ளதை இன்றளவும் பொது மக்கள் கண்ணுற்று அறியலாம் இக்கல்வெட்டின் படிகளை தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறையினர் புத்தகமாக வெளியிட்டுள்ளனர்

உற்சவங்கள்

இத்திருக்கோயிலில் ஆண்டு தோறும் தமிழ் வருடப்பிறப்பு, ஆடி வெள்ளி தாயார் புறப்பபாடு, ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி நவராத்திரி, கார்த்திகை தீபத்திருவிழா , மார்கழி பகல் பத்து இராப்பத்து, மோகினி அவதாரம் , ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி, தை வெள்ளி தாயார் புறப்பாடு , ஸ்ரீராமர் புறப்பாடு, உறியடித் திருவிழா, ஆண்டாளுக்கு திருஆடிப்பூரத் திருவிழா, திருமங்கை வேடுபறி, ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி மாதப்பிறப்பு, அமாவாசை, ஏகாதசி, பிரதோச வழிபாடுகள் ஆகியவைகள் உள்பட வைணவ தலத்திற்குரிய அனைத்து விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கம்பத்திற்கு அனுமந்த ஜெயந்தியும் ஆடி 18 அன்று தீர்த்தத் திருவிழாவும் நடத்தப்பட்டு வருகின்றன.

10 நாள் உற்சவத்தில் பங்குனி உத்திர தேர் திருவிழாவில் மரத்தேரில் எம்பெருமாள் அருள்மிகு மதனகோபாலர் ஸ்ரீதேவி, பூதேவி தாயாருடன் எழுந்தருளி திருநகர் வலம் வந்து அருள்காட்சி அளிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். கஸ,த.

திருவிழா பங்குனி மாதத்தில் உத்திர திருத்தேர் திருவிழா மிக விமரிசையாக நடைபெற்று வருகிறது

இதர சிறப்புகள்

இத்திருக்கோயில் ஸ்தல விருட்சமான நந்தியாவட்டை செடியை பஞ்ச பாண்டவர்கள் நட்டு வைத்து வழிபாடு செய்து வந்தனர், அதன் பின்னர் அச்செடியானது இதுநாள் வரையில் பழுதின்றி நல்ல நிலையில் செழிப்புடன் வளர்ந்து வருகிறது. அதில் பூக்கும் நந்தியாவட்டை பூக்களைக் கொண்டு மாலை தொடுத்து பெருமாளுக்கு சாத்துபடி செய்து வழிபடுவது இதுநாள் வரை நடைமுறையில் உள்ளது, நந்தியாவட்டை பூவானது கண் நோய்கள் தீர்க்கும் அருமருந்தாகப் பயன்படுவதும், இத்தலத்தின் சிறப்புகளில் மிக முக்கியமானதாகும்.

பழமையான இத்திருக்கோயிலின் ராஜகோபுர நுழைவாயில் மட்டும் இருந்த நிலையில் அரசு மற்றும் பொது மக்கள் நிதி உதவியுடன் திருப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு 23.01.2013 அன்று திருக்குடமுழுக்கு மிகச்சிறப்பாக நடத்தப்பெற்று எழிலார்ந்த தோற்றத்துடன் கம்பீரமாக காட்சியளிக்கிறது இத்திருக்கோயிலில் .



நடைதிறக்கும் நேரம்

காலை 6.30 மணி முதல் பகல் 12.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் இரவு 8.30 மணிவரை

பூஜை காலங்கள்

திருக்கோயிலில் தினமும் நான்கு கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

காலை சந்தி	காலை 9.00 மணி
உச்சிக்காலம்	மதியம் 12.00 மணி
சாயரட்சை	மாலை 6.30 மணி
அர்த்தஜாமம்	இரவு 8.30 மணி

அமைவிடம்

இத்திருக்கோயில் அரியலூர் புகைவண்டி நிலையத்தில் இருந்து 30 கி.மீ. தொலைவிலும், திருச்சியிலிருந்து சென்னை செல்லும் நான்கு வழிச்சாலையில் திருச்சி 55 -வது கி.மீ. தொலைவிலும் பெரம்பலூர் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது.

வழித்தடம்

திருச்சியில் இருந்தும் சென்னையில் இருந்தும், அரியலூரில் இருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்,
அருள்மிகுதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
செட்டிக்குளம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்
தொலைபேசி : 04328 268008
இணையதளம் : www.chetikulammurugantemple.tnhrce.in.
மின்னஞ்சல் : chetikulam@gmail.com



அருள்மிகு ஏகாம்பரேசுவரர் மற்றும் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

செட்டிக்குளம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்

இறைவன்	அருள்மிகு ஏகாம்பரேசுவரர், அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி
இறைவி	அருள்மிகு காமாட்சியம்மன்
தீர்த்தம்	பஞ்சநதி தீர்த்த குளம்
தலவிருட்சம்	வில்வமரம்
ஆகமம்	காமிக ஆகமம்

வரலாற்றுச் சிறப்பு

முற்காலத்தில் இத்தலமானது கடம்ப மரங்கள் நிறைந்த கடம்பவனமாக இருந்துள்ளது. உறையூரை தலைநகரமாகக்கொண்டு சோழ மன்னன் பராந்தகன் ஆட்சி செய்தபோது, வணிகன் ஒருவன் உறையூரிலிருந்து வணிக நிமித்தமாக வடக்குநோக்கி பயணத்தை தொடங்கினான். அவ்வணிகன் இக்கடம்பவனத்தை வந்தடைந்தபோது மாலை பொழுதாகி பின் இருள் சூழ்ந்துவிட்டதால், மேற்கொண்டு பயணம் மேற்கொள்ள இயலாமல், இக்கடம்பவனத்திலேயே தங்க தீர்மானித்து, அங்கிருந்த ஆலமரத்தின்மீது ஏறி அமர்ந்து சாய்ந்திருந்தான். இக்கடம்பவனத்தில் நள்ளிரவில் திடீரென்று அவன் கண்னெதிரில் ஒளி மிகுந்த , ஜோதிப்பிழம்பின் நடுவே ஒரு சிவலிங்கம் தோன்றி, தேவர்களும் முனிவர்களும் வழி படுகின்ற காட்சி பளிச்சென்று தோன்றி மறைந்தது.

இவ்வற்புத காட்சியை கண்ட வணிகன் உணர்ச்சி மிகுதியால் மயிர்கூச்செறிந்து விதிர்விதித்து, விடிந்ததும் இவ்வரிய காட்சியை சோழ மன்னரிடம் உரைப்பதற்காக உறையூரை நோக்கி திரும்பச் சென்றான். உறையூரை அடைந்ததும் அரண்மனைக்குச் சென்று மாமன்னன் பராந்தகச்சோழனிடம் முதல் நாள் இரவில் கடம்பவனத்தில் தான் கண்ட அற்புதக் காட்சியை எடுத்துரைத்தான்.

சோழனின் அரண்மனையில் விருந்தினராய் தங்கியிருந்த குலசேகரபாண்டியனும் இதைக் கேள்வியுற்றான் பாண்டியனும், சோழனும் வணிகனுடன் தன் பரிவாரங்களையும் அழைத்துக் கொண்டு இக்கடம்பவனத்தை வந்தடைந்து சிவலிங்கத்தைத் தேடி அலைந்தார்கள்.

இவ்வாறு நாற்றிசையும் தேடி அலைந்தபோது கையில் செங்கரும்பு ஒன்றினை கையில் ஊன்றிக்கொண்டு முதியவர் ஒருவர் தடுமாறிக் கொண்டு மன்னர்களை அணுகி, சிவலிங்க இருப்பிடத்தை காட்டி திடீர் என ஜோதி வடிவமாகி மறைந்தார்.

ஜோதி மறைந்த கிழக்கு திசை நோக்கி மன்னர்கள் அதிர்ச்சியுடன் பார்த்தபோது தூரத்தே ஒரு குன்றின்மீது முருகப்பெருமான் தண்டாயுதபாணியாகக் காட்சி தந்தார்.

பக்தி பரவசத்தில் ஆழ்ந்த சோழனும், பாண்டியனும் ஏக காலத்தில் ஜோதியின் வடிவில் தோன்றிய ஏகாம்பரேசுவரருக்கு ஓர் ஆலயமும், கிழக்கே குன்றின் மீது தோன்றிய தண்டாயுதபாணிசுவாமிக்கு அம்மலையின் மீது ஓர் ஆலயமும் கட்டுவது என தீர்மானித்தனர். குலசேரக பாண்டியனால் இரு ஆலயங்களும் கட்டப்பட்டது.

கற்புக்கரசியான கண்ணகி பாண்டியனால் தன் கணவன் கோவலன் கொலையுண்டபிறகு கடும் சினம்கொண்டு மதுரையை எரித்தும், சினம் தனியாதவளாக, வடமேற்கு நோக்கி வரும்போது இத்தலத்தின் வழியாக வந்தபோது முருகப்பெருமான் கண்ணகியின் கடுஞ்சினத்தை தணித்து சிறுவாச்சூர் சென்று மதுரகாளியாக அமர்ந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க ஆற்றுபடுத்தினார் என்றும் செவி வழிச் செய்திகள் கூறுகின்றன.

உற்சவங்கள்

ஆடிப்பூரம், ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, கந்தர் சஷ்டி, தீபாவளி, திருக்கார்த்திகை, தனுர்மாதம், திருவாதிரை, மஹாசிவராத்திரி, சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம்

திருவிழா

தைபூசத்திருவிழா, பங்குனி உத்திர திருத்தேர் திருவிழா

அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழா மிக விமர்சையாக நடைபெறும் திருவிழா ஆகும்.

கொடியேற்றத்துடன் தொடங்கி 14 நாட்கள் சிறப்பு அபிஷேக அலங்காரத்துடன் காலை மற்றும் இரவு என சுவாமி திருவீதி உலா நடைபெறுகிறது. இவ்விழாவில் திருக்கல்யாண உற்சவம், ஒவ்வொரு நாளும் குதிரை வாகனம், வெள்ளி மயில் வாகனம், புஷ்ப பல்லக்கில் சுவாமி புறப்பாடும் நடைபெறும்.

ஒன்பதாம் நாளன்று மண்டகப்படி நடத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்ட திருத் தேரில் சுவாமி புறப்பாடு செய்து மலையை சுற்றி பக்தர்களுக்கு காட்சி தந்து வருவது அழகு.

பக்தர்கள் அலகு குத்தி காவடி எடுத்தும், தம் நிலங்களில் விளைந்த விளைபொருட்களை காணிக்கையாக செலுத்தியும், முடி காணிக்கை செலுத்தியும், முருகப்பெருமானின் அருளால் தாம் பெற்ற குழந்தைகளை கரும்பு தொட்டிலிலே சுமந்து கொண்டு வந்து தம் பிரார்த்தனை நிறைவேற்றி இறைவனை வழிபட்டு செல்வர்.

திருவிழாவின் நிறைவாக பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு, விடையாற்றி உற்சவம் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவடைகிறது.

இதர சிறப்புகள்

மேற்குமலை கிழக்குமலை என இரட்டை மலையாக விளங்கும் இத்திருத்தல வரலாறு மெய்சிலிர்க்கும் மேன்மை உடையது.

இத்திருக்கோயிலில் திருவிழாக்கள் அனைத்தும் மிகச்சிறப்பாக ஆண்டு தோறும் கொண்டாடப்படுகின்றன. இப்பகுதியில் இருந்து மட்டுமல்ல மற்ற மாவட்டங்களில் இருந்தும் திருவிழா சமயத்தில் பக்தர்கள் திரளாக வந்து கலந்து கொள்கின்றனர். இங்கு நடைபெறும் பங்குனி உத்திரத் திருத்திருவிழா வருடாந்திர திருவிழா ஆகும்

நடைதிறக்கும் நேரம்

காலை 7.30 மணி முதல் பகல் 12.00 மணிவரை

மாலை 4.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரை.

பூஜைகாலங்கள்

திருக்கோயிலில் தினமும் நான்கு கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

காலைசந்தி	காலை 8.00 மணிக்குமேல் 9.00 மணிக்குள்
உச்சிக்காலம்	பகல் 11. 30 மணிக்குமேல் 12.00 மணிக்குள்
சாயரட்சை	மாலை 5.30 மணிக்குமேல் 6.30 மணிக்குள்
அர்த்தசாமம்	இரவு 7.30 மணிக்குமேல் 8.00 மணிக்குள்

அமைவிடம்

திருச்சியிலிருந்து சென்னை செல்லும் நெடுஞ்சாலையில் ஆலத்தூர் கேட்டில் இருந்து மேற்கே 8. கி.மீ. தொலைவிலும், பெரம்பலூருக்கு சுமார் 18 கி.மீட்டர் தொலைவிலும், திருச்சிக்கு வடக்கே 40 கி.மீ. தொலைவிலும் துறையூரிலிருந்து கிழக்கே 21 கி.மீட்டர் தொலைவிலும் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

வழித்தடம்

பெரம்பலூரிலிருந்தும், துறையூரில் இருந்தும் திருச்சியிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்,
அருள்மிகுதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
செட்டிக்குளம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்
தொலைபேசி : 04328 268008
இணையதளம் : www.chetikulammurugantemple.tnhrce.in.
மின்னஞ்சல் : chetikulam@gmail.com

பஞ்ச வில்வங்கள்

வில்வம்
கிளுவை
மாவிலங்கை
விளா
நொச்சி



அருள்மிகு பூமலை சஞ்சீவிராயர் திருக்கோயில்

பாடாலூர் - ஆலத்தூர் வட்டம் - பெரம்பலூர் மாவட்டம்

இறைவன்	அருள்மிகு பூமலை சஞ்சீவிராயர்
ஆகமம்	பாஞ்சராத்ர ஆகமம்

தலச்சிறப்பு

இராம, இராவண யுத்தத்தின் பொழுது இராமர் மற்றும் அவரது சேனைகள் எதிரியின் அஸ்திரத்தினால் தாக்கப்பட்டு மயங்கி விழுந்து விடவே அனைவரும் திகைத்து நிற்கின்றனர். அப்பொழுது ஜாம்பவானின் யோசனைப்படி சஞ்சீவி மூலிகை கொண்டு வருவதற்காக ஸ்ரீ அனுமன் இமயமலையை நோக்கி புறப்பட்டுச் சென்றார்.பல்வேறு மூலிகைகள் உள்ள சஞ்சீவி மலையில் சஞ்சீவி மூலிகையை இனம் காண நேரம் போதாக் காரணத்தால் அங்கிருந்து சஞ்சீவி மலையையே பெயர்த்து தூக்கிக் கொண்டு வான் வழியாக பறந்து திரும்பி வந்தபொழுது அம்மலையிலிருந்து பெயர்ந்து விழுந்த சிறுகுன்றே இத்தலத்தில் பூமலை என பெயர் பெற்றும், இம்மலையின் மீது இருக்கும் ஆஞ்சநேயப் பெருமாள் பூமலை சஞ்சீவிராயப் பெருமாள் என்றும் வழங்கப்படுகிறார். மலைமீது ஏறி தன்னை வணங்க முடியாத பக்தர்களுக்காக தானே இறங்கி வந்து வழித்துணை ஆஞ்சநேயராக மலை அடிவாரத்தில் கோயில் கொண்டு பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

திருவிழாக்கள்

பூமலை சஞ்சீவிராயருக்கு புரட்டாசி சனிக்கிழமைகளில் உற்சவமும், வழித்துணை ஆஞ்சநேயருக்கு அனுமத் ஜெயந்தியும், மூலநட்சத்திரத்தில் சிறப்பு அபிஷேகங்களும் விமரிசையாக நடைபெற்று வருகிறது

நடைதிறக்கும் நேரம்

காலை 7.30 மணி முதல் பகல் 12.00 மணிவரை
மாலை 4.00 மணிமுதல் இரவு 7.30 மணிவரை

பூஜை காலங்கள்

தேசிய நெடுஞ்சாலையில் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளஅருள்மிகு வழித்துணை ஆஞ்சநேயர் கோயிலில்

காலை 8.00 மணிக்கு திருவாராதனமும்
மாலை 4.00 மணிக்கு திருவாராதனமும்

என இரண்டு கால பூஜைகள் நடைபெற்று வருகிறது. மலைமேல் அமைந்துள்ளஅருள்மிகு பூமலை சஞ்சீவிராயப் பெருமாள் திருக்கோயில் சனிக்கிழமை தோறும் திறக்கப்பட்டு பூஜை நடைபெற்று வருகிறது.

அமைவிடம்

திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பெரம்பலூருக்கு தெற்கே சுமார் 18 கி.மீ. தொலைவிலும், திருச்சிக்கு வடக்கே சுமார் 40. கி.மீ. தொலைவிலும் பாடாலூரில் பூமலை எனப்படும் மலைக்குன்றின் மீது இக்கோயில் அமைந்துள்ளது.

மலையடிவாரத்தில் நெடுஞ்சாலை ஓரத்தில்அருள்மிகு வழித்துணை ஆஞ்சநேயர் திருக்கோயில் அமைந்துள்ளது.

வழித்தடம்

திருச்சியிலிருந்தும் பெரம்பலூரிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்,
அருள்மிகுதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
செட்டிக்குளம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்
தொலைபேசி : 04328 268008
இணையதளம் : www.chetikulammurugantemple.tnhrce.in.
மின்னஞ்சல் : chetikulam@gmail.com



அருள்மிகு அபராதரட்சகர் திருக்கோயில்

சு.ஆடுதுறை, குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்

இறைவன்	அருள்மிகு அபராதரட்சகர்
இறைவி	அருள்மிகு சுகந்தகுந்தலாம்பிகை
தீர்த்தம்	வானர ஸ்நான தீர்த்தம் (நீவா நதி)
தலவிருட்சம்	வில்வம், அத்தி
ஆகமம்	காமிக ஆகமம்

தலச் சிறப்பு

சுவேத கேது முனிவர் திலோத்தமை மீது மோகம் கொண்டு சிவ பூஜை வேளையில் சிற்றின்பத்தில் விருப்பங்கொண்டிருந்ததால் அவர் தந்தை உத்தாலகரர் ஆணையின்படி நீவா நதிக்கரையில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வணங்கி பாவம் நீங்கப்பெற்றார்.

இதன் காரணமாக சுவேத கேது ஆடுதுறை எனவும் வழங்கப்பட்டது இத்தலமானது பிற்காலத்தில் சுருக்கமாக சு.ஆடுதுறை என வழங்கலாயிற்று.

சுவேத கேது முனிவர் செய்த பாவங்களை பொறுத்து மன்னித்தருளியதால் இறைவனுக்கு அபராதரட்சகர் (குற்றம் பொறுத்தவர்) என பெயர் வழங்கலாயிற்று

திருவிழாக்கள்

மாசிமகம் திருவிழா மிக விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

நடை திறக்கும் நேரம்

காலை 6.00 மணி முதல் பகல் 11.30 மணிவரை
மாலை 4.30மணி முதல் இரவு 8.00 மணிவரை

பூஜா காலங்கள்

இத்திருக்கோயிலில்தினசரி நான்கு கால பூஜைகள் நடைபெற்று வருகிறது.

காலை சந்தி	காலை மணி 8.30 - 9.00 மணி
உச்சிக்காலம்	மதியம் மணி 11.00 -11.30 மணி
சாயரட்சை	மாலைமணி 6.00 - 6.30 மணி
அர்த்தஜாமம்	இரவுமணி 8.00 - 8.30 மணி

அமைவிடம்

இத்திருத்தலம் திருச்சியிலிருந்து சென்னை செல்லும் சாலையில் வடக்கே 75 கி.மீ. தொலைவிலும் தொழுதூரில் இருந்து கிழக்கு திசையில் 12. கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

இதர சிறப்புகள்

இத்தலத்தினை ஒட்டி ஓடும் நீவா நதி புண்ணிய நதியாக போற்றப்படுகிறது. காசிக்கும், இராமேஸ்வரத்திற்கும் போக இயலாதவர்கள் தங்களின் முன்னோர்களுக்குச் செய்யும் பித்ரு தர்ப்பணங்களை இந்த நீவா நதிக்கரையில் கொடுத்து வருகிறார்கள்.

வழித்தடம்

பெரம்பலூரிலிருந்தும் தொழுதூரிலிருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்,
அருள்மிகுதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
செட்டிக்குளம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்
தொலைபேசி : 04328 268008
இணையதளம் : www.chetikulammurugantemple.tnhrce.in.
மின்னஞ்சல் : chetikulam@gmail.com



அருள்மிகு வாலீசுவரர் திருக்கோயில்

வாலிகண்டபுரம், வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம்

இறைவன்	அருள்மிகு வாலீசுவரர்
இறைவி	அருள்மிகு வாலாம்பிகை
தீர்த்தம்	பிரம்ம தீர்த்தம்
தலவிருட்சம்	மாவிலங்கை மரம்
ஆகமம்	காமிக ஆகமம்

தலச்சிறப்பு

கிரேதயுகத்தில் படைப்பு கடவுள் பிரம்மா, இவ்வூர் ஆற்றங்கரையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபட்டு அருள் பெற்றார். இராமாயண காலத்தில் வானர அரசன் வாலி இவ்வூர் சிவ பெருமானை வழிபட்டு, தன்னை எதிர்க்கும் எதிரியின் பலத்தில் பாதி தனக்கு கிடைக்க வரம் பெற்றார் என புராணவரலாறு கூறுகிறது. இத்திருக்கோயில் மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறை பராமரிப்பில் உள்ளது.

உற்சவங்கள்

பங்குனி உத்திரம், திருவாதிரை, மாசி மகம், சிவராத்திரி, பிரதோஷம், ஆகிய உற்சவங்கள் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றன. இங்கு நடைபெறும் வளர்பிறை மற்றும் தேய்பிறை பிரதோஷங்கள் சிறப்பாக கொண்டாடப் படுகின்றன

இதர சிறப்புகள்

வாலிகண்டபுரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் வாலீசுவரர் என்று போற்றப்படுகிறார். வாலியின் ஆற்றல் பற்றியும், சிவ பக்தி பற்றியும் இராமாயணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

முன்னொரு காலத்தில் கிட்கிந்தா என்ற வனம் நிறைந்த நாட்டை வாலி என்பவன் ஆண்டு வந்தான் அவன் குரங்குகளின் அரசனாக விளங்கினான். அவன் ஆகம விதிகளை அறிந்து முறைப்படி சிவபெருமானை முப்பொழுதும் வணங்கி வந்தான். பெரும் தவம் செய்தான்.

அவனது தவ வலிமையை கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவன் முன் தோன்றினார். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்! என்று கூறினார். வாலி தன்னுடன் யார் சண்டைக்கு வந்தாலும் அவர்களின் பலத்தில் பாதி தனக்கு வந்து விட வேண்டும் என்று கேட்டார். சிவபெருமானும் அகம் மகிழ்ந்து அவன் கேட்ட வரத்தை வழங்கினார்.

அன்று முதல் அவன் யாருடன் போர் செய்தாலும் எதிரியின் பலத்தில் பாதி வாலிக்கு வரத் துவங்கியது. அதனால் தான் வாலியுடன் செய்த போரில் துந்துபி என்ற அசுரன் தோற்றான். இலங்கை வேந்தன் இராவணனும் வாலியிடம் தோல்வி அடைந்தான்.

வாலியை நேருக்கு நேர் நின்று வெல்ல முடியாது என்பதை உணர்ந்து இராமன் மறைந்து நின்று கொன்றான். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது வேதம் நான்கினுமம் மெய்பொருள் ஆவது நாதன் நாமம் நமச்சிவாயவே என திருஞானசம்மந்தர் பாடியது போல் அருள்மிகு வாலீசுவரரை உள்ளம் உருகி பக்தியுடன் வழிபாடு செய்தால் அல்லல் போகும். ஆனந்த வாழ்வு பெருகும்.

நடை திறக்கும் நேரம்

காலை 6.00 மணி முதல் பகல் 11.30 மணி வரை
மாலை 4.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை

பூஜா காலங்கள்

இத்திருக்கோயிலில் தினசரி இரண்டு கால பூஜைகள் நடைபெற்று வருகிறது.

காலைசந்தி	காலை 8.00 மணிக்குமேல் 8.30 மணிக்குள்
சாயரட்சை	மாலை 5.00 மணிக்குமேல் 6.00 மணிக்குள்

அமைவிடம்

இத்திருத்தலம் திருச்சியிலிருந்து சென்னை செல்லும் சாலையில் வடக்கே 65.கி.மீ. தொலைவிலும் பெரம்பலூரிலிருந்து 13 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

வழித்தடம்

பெரம்பலூரிலிருந்தும் தொழுதூரில் இருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

தொடர்பு முகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்,
அருள்மிகுதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,
செட்டிக்குளம், ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்
தொலைபேசி : 04328 268008
இணையதளம் : www.chetikulammurugantemple.tnhrce.in.
மின்னஞ்சல் : chetikulam@gmail.com

அட்டவீரட்டத்தலங்கள்

சிவபெருமான் தர்மம் தழைத்தோங்க, அதர்மத்தை அழிக்க தன்னுடைய வீரத்தை வெளிப்படுத்திய இடம் வீரட்டத்தலம் ஆகும்.

திருக்கண்டியூர்	பிரமன் சிரத்தை வெட்டிய தலம்
திருக்கோவிலூர்	அந்தகன் என்ற அவுணனின் ஆணவத்தை அடக்கிய தலம்
திருவதிகை	முப்புரங்களை எரித்த தலம்
திருப்பறியலூர்	தக்கனின் வேள்வியை சிதைத்த தலம்
திருவிற்குடி	ஜலந்தராசூரனை சம்ஹாரம் செய்த தலம்
திருவழுவூர்	கஜாஸீரஸம்ஹாரம் செய்த தலம்
திருக்குறுக்கை	மன்மதனை எரித்த தலம்
திருக்கடையூர்	மார்க்கண்டேயருக்காக யமனை உதைத்த தலம்



அருள்மிகு விருத்தாசலேசுவரர் திருக்கோயில்

வெங்கனூர் கிராமம், வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம்

இறைவன்	அருள்மிகு விருத்தாசலேசுவரர்
இறைவி	அருள்மிகு விருத்தாம்பிகை, அருள்மிகு பாலாம்பிகை
தீர்த்தம்	சுவேத நதி என்ற வெள்ளாறு
தலவிருட்சம்	வில்வம்
ஆகமம்	காமிக ஆகமம்

வரலாற்றுச் சிறப்பு

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வெங்கனூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு விருத்தாசலேஸ்வரர் திருக்கோயிலானது கி.பி. 16ம் நூற்றாண்டில் ஆதிலிங்க ரெட்டியார் , அண்ணாமலை ரெட்டியாரால் கட்டப்பட்டுள்ளது. தந்தையும் மகனுமான இவர்கள் துறைமங்களம் ஜமீனாக இருந்து வந்து இப்பகுதியினை ஆட்சிசெய்த குறுநில மன்னர்கள் ஆவார்கள். இவர்கள் ஒவ்வொரு பிரதோஷத்திற்கும், இங்கிருந்து விருத்தாசலம் சென்று அங்கு தங்கி பிரதோஷ தரிசனம் செய்து வந்துள்ளனர். ஒருமுறை பெருமழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு சுவேத நதி என்னும் வெள்ளாற்றில் நீர் வரத்து அதிகமானதால் அவர்கள் தரிசனம் தடைபட இவ்விருவரும் சிவாய நம என்னும் ஐந்தெழுத்தை ஓதி ஆற்றுக்குள் இறங்க நீர் இரு கூறாக பிளந்து வழிவிட அக்கரைக்கு சென்று பிரதோஷ தரிசனம் செய்து அன்றிரவு அங்கு தங்கினார்கள்.

அவர்களது கனவில் சிவபெருமான் அடியார் உருவில் தோன்றி என் ஆட்சிக்குட்பட்ட வெங்கனூரில் யாம் வன்னிமரத்தின் அடியில் வீற்றுள்ளோம் என காட்டி மறைந்தருளினார். இருவரும் புறப்பட்டு வெங்கனூர் வந்து காணும்போது இறைவனும், இறைவியும் இருப்பதை கண்டு திருக்கோயில் அமைக்கத் துவங்கினார்கள். சிற்பிகளைக்கொண்டு திருக்கோயில் அமைத்து கி.பி. 16 ஆம் ஆண்டு பிழைபொருத்த குருக்கள் என்பவரால் கும்பாபிஷேகம் நடத்தினார்கள்.

சிற்பச் சிறப்பு

இத்திருக்கோயில் கருவறை ஓம் என்ற பிரணவ அமைப்பில் அமைந்துள்ளது. கருவறை முதல் கோபுரம் வரையிலும் ஒரே கல்லால் கட்டப்பட்டுள்ளது.

இலக்கியச் சிறப்பு

சிவப்பிரகாச சுவாமிகள் திருவலங்கை மாலை, திருவலங்கை பரணி, திருவலங்கை அந்தாதி, திருவலங்கை, உலா,திருவலங்கைக் கலம்பகம் ஆகிய நூல்களில் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

தனிச்சிறப்பு

இத்திருக்கோயிலின் கருவறை ஓம் என்ற பிரணவ அமைப்பில் அமைந்துள்ளதும், கருவறையில் சிற்ப வேலைப்பாடுகள் வடிவமைக்கப்பட்டு ருத்ரன் ஆகிய சிவபெருமான் கற்பகிரஹம்சுற்றி அந்தியுத்தகள காட்சிகளும் அம்பாள் கற்ப கிரஹம் சுற்றி என்னுள் அனைத்தும் அடக்கம் என்பது போல் அனைத்து ஜீவராசிகளின் வடிவங்களும் செதுக்கப்பட்டுள்ளது. அருள்மிகு ஆத்து விநாயகர் 14 படிகள் பூமிக்குள் இறங்கி சென்று வழிபடும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.திருக்கல்யாண மண்டபம் ஓசை கொடுக்கும் இசைத் தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டதும் இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

உற்சவங்கள்

இத்திருக்கோயில் தமிழ் வருடப்பிறப்பு, கார்த்திகை தீபத் திருவிழா, மார்கழி திருவாதிரை ஆகிய உற்சவங்கள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பங்குனி உத்திர வழிபாடும் நடைபெற்று வருகிறது. பிரதோஷமும் இத்திருக்கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பிரதி தமிழ் மாத பிறப்பு, அமாவாசை பௌர்ணமி ஆகிய தினங்களில் இறைவனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டு வருகிறது.

நடைதிறக்கும் நேரம்

காலை 6.00 மணிமுதல் பகல் 11.30 மணிவரை
மாலை 4.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை

பூஜை காலங்கள்

இத்திருக்கோயிலில் தினசரி மூன்று கால பூஜைகள் நடைபெற்று வருகிறது.

காலை சந்தி	காலை	9.00 மணி
உச்சிக்காலம்	பகல்	12.00 மணி
சாயரட்சை	மாலை	6.00 மணி

அமைவிடம்

இத்திருக்கோயில் பெரம்பலூர் நகரில் இருந்து 22 கிலோமீட்டர் தொலைவிலும், அரியலூரில் இருந்து 52 கிலோ மீட்டர் தொலைவிலும் சேலத்தில் இருந்து பெரம்பலூர் வரும் சாலையில் 34 கி.மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது.

வழித்தடம்

பெரம்பலூரிலிருந்தும் சேலம், ஆத்தூர், மற்றும் அரியலூரில் இருந்தும் பேருந்து வசதிகள் உள்ளன.

தொடர்புமுகவரி

செயல் அலுவலர்
அருள்மிகு விருத்தாசலேஸ்வரர் திருக்கோயில்
வெங்கனூர், பெரம்பலூர் மாவட்டம்.
செல் : 9894035312,
பரம்பரை அறங்காவலர் : 8722410216

அஷ்ட புஷ்பங்கள்

எருக்கு	பாதிரி
செந்தாமரை	அலரி
புன்னை	சண்பகம்
நந்தியாவர்த்தம்	நீலோற்பலம்

அபிஷேகப் பொருட்களும் அவற்றின் பயனும் :

நல்லெண்ணெய்	- சுகம்
அரிசி மாவு	- கடன் தீரல்
நெல்லிமுள்ளி	- நோய்நீக்கம்
மஞ்சப்பொடி	- வசீகரம்
பஞ்சகவ்யம்	- தூய்மை
பஞ்சாமிர்தம்	- ஜயம்
பால்	- ஆயுள்
தயிர்	- மக்கட்பேறு
நெய்	- முத்தி
தேன்	- சுகம்
கரும்பின் சாறு	- பிணி நீக்கம்
எலுமிச்சை	- எமபயம் போக்கல்
இளநீர்	- போகம்
சந்தனம்	- இலட்சுமிகடாட்சம்
கும்பம்	- குற்றங்கள் தீரல்

பஞ்சபூதத் தலங்கள்

நீர்	-	ஜலலிங்கம்	-	திருவாணைக்காவல்
நெருப்பு	-	அக்னிலிங்கம்	-	திருவண்ணாமலை
காற்று	-	வாயு லிங்கம்	-	திருக்காளத்தி
நிலம்	-	பிருத்வி லிங்கம்	-	காஞ்சிபுரம்
ஆகாயம்	-	ஆகாச லிங்கம்	-	சிதம்பரம்

அருள்மிகு வாலீசுவரர் திருக்கோயில்

வாலிகண்டபுரம்,

கல்லிலே வடிவமைக்கப்பட்ட கலை வண்ணங்கள்







அருள்மிகு வாலீசுவரர் திருக்கோயில்

வாலிகண்டபுரம்,

கல்லிலே வடிவமைக்கப்பட்ட கலை வண்ணங்கள்









அருள்மிகு வாலீசுவரர் திருக்கோயில்

வாலிகண்டபுரம்,

கல்லிலே வடிவமைக்கப்பட்ட கலை வண்ணங்கள்







அருள்மிகு ஏகாம்பரேசுவரர் திருக்கோயில்

பெரம்பலூர்

இராஜகோபுரம்



திருக்கோயில் தோற்றம்



மாண்புமிகு **தமிழக முதல்வர் அம்மா** அவர்கள்

அறிவித்த அன்னதான திட்டத்தின்படி பெரம்பலூர் மாவட்டத்தில் அன்னதானம் நடைபெறும் திருக்கோயில்கள் விபரம்

வ. எண்	திருக்கோயில் பெயர் மற்றும் முகவரி	நாள் 1- க்கு பயயாளிகள்	நாள் 1 –க்கு உபயதாரர் திட்டநிதி	தொடர்பிற்கு
1.	அ/மி மதுரகாளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர், பெரம்பலூர் வட்டம் & மாவட்டம். திங்கள் மற்றும் வெள்ளி மற்ற நாட்களில்	 200 100	 4000 2000	04328–291375
2.	அ/மி மதனகோபலசுவாமிதிருக்கோயில், பெரம்பலூர், பெரம்பலூர் வட்டம் & மாவட்டம்.	50	1000	9894035312
3.	அ/மி தண்டாயுதபாணிதிருக்கோயில், செட்டிக்குளம்இ ஆலத்தூர் வட்டம், பெரம்பலூர் மாவட்டம்	100	2000	04328–268008

அன்னதான திட்டத்தில் அன்னதான திட்ட நன்கொடை வைப்பு நிதி

நாள் 1 – க்கு 100 நபர்களுக்கு ரூ. 25,000/– மும்

நாள் 1 – க்கு 50 நபர்களுக்கு ரூ. 15,000/– மும்

நாள் 1 – க்கு 25 நபர்களுக்கு ரூ. 10,000/– மும்

செலுத்தினால் உபயதாரர்கள் குறிப்பிடும் நாளில் அத்திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கப்படும். மேலும் அன்னதான நன்கொடை செலுத்துபவர்களுக்கு வருமானவரிச் சட்டம் **80 (G)**– ன் கீழ் வருமான வரி விலக்கும் உள்ளது.

திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

திங்கள் இதழை வாங்கி படியுங்கள்

சந்தா விபரம்

தனி இதழின் விலை	ரூ.	15.00
ஓராண்டுச் சந்தா	ரூ.	180.00
ஐந்தாண்டுச் சந்தா	ரூ.	900.00
பத்து ஆண்டுச் சந்தா	ரூ.	1800.00
ஆயுட்காலச் சந்தா	ரூ.	2700.00

(ஆயுட்காலம் என்பது
அதிக பட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

இதற்கான பணவிடையை / வங்கி வரைவோலையை
Commissioner, HR & CE Dept., Chennai-34
என்ற முகவரிக்கு அனுப்பவும்.